FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301615

1. District : திண்டுக்கல் PS: மா.த.க. பிரிவு Year: 2026 FIR No.: 17/2026 Date: 30.10.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988, as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 28.10.2026 - 16.00 hrs
29.10.2026 - 14.15 hrs
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 30.10.2026 Time : 07.45 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தொலைபேசி தகவல் மூலமாக.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகம்.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 KM, தென்கிழக்கு

Beat Number : — (b) Address : —
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. P. திலகர் (b) Father's/ Husband's Name : பரமசிவம் (வே)
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 41/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் அரசு ஒப்பந்ததாரர் (g) Address : 7/5/32A, சோனைகோவில் வடக்கு, கன்னிவாடி, திண்டுக்கல் மேற்கு தாலுகா, திண்டுக்கல்.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு. தங்கவேல், சார்நிலை அதிகாரி, திண்டுக்கல் - மாநகராட்சி அலுவலகம், திண்டுக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30/10/2026

30/10/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.10.2026 at 11.00 hrs

Name: பெயர் ..U. பழனிசாமி.
Rank: நிலை .....No. எண் .....

காவல் ஆய்வாளர்,
வழக்கு தொடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திண்டுக்கல்.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:17/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 30.10.2026-ம் தேதி காலை சுமார் 07.45 மணிக்கு நிலையத்தில் இருந்த போது திரு.P.குமார், 41/2026, த/பெ.பொன்ராஜ் (லேட்), கதவு எண்.7-5-32A, சோணை கோவில் தெரு, கன்னிவாடி, மேற்கு தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காலை 08.45 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர். P.குமார், 41/2026, த/பெ.பொன்ராஜ் (லேட்), கதவு எண்.7-5-32A, சோணை கோவில் தெரு, கன்னிவாடி, மேற்கு தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். பெறுநர்.DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். ஆட்டோ டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய அம்மா திருமதி.தமயந்தி லட்சுமி அவர்களின் அப்பா திரு.மொட்டையாண்டி அவர்கள் இந்திய கப்பற்படையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று கடந்த 2006-ல் இறந்து விட்டார். அவரது இறப்பிற்கு பின் அவரது பென்சன் தொகையை எனது பாட்டி சின்னம்மாள் பெற்று வந்தார். எனது தாத்தா திரு.மொட்டையாண்டி இறந்துவிட்டதால் எனது பாட்டியை எங்களுடன் வைத்து பராமரித்து வந்தோம். அவரும் பென்சன் தொகையை தவறாமல் பெற்று வந்தார். எனது தந்தை திரு.பொன்ராஜ் கடந்த 11.07.2024 அன்று திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிக்சையில் இருந்தவர் சிகிச்சை பலனிற்று இறந்துவிட்டார். எனது தந்தையும் இறந்துவிட்டதால் எனது பாட்டியை எனது அம்மா திருமதி.தமயந்தி லட்சுமி அவர்கள் பராமரித்து வந்தார். எனது தந்தை இறந்த ஒரு ஆறு மாத காலத்திற்கு பின்பு எனது பாட்டி திருமதி.சின்னம்மாள் அவர்களும் இறந்து விட்டார். அதன் பின்னர் எனது பாட்டி திருமதி.சின்னம்மாள் அவர்கள் பெற்று வந்த குடும்ப ஓய்வூதியத்தை எனது அம்மா பெறவில்லை. நான் எனக்கு தெரிந்த சில உறவினர்களிடம் விசாரித்தபோது எனது அப்பா திரு.பொன்ராஜ் அவர்கள் எனது பாட்டி திருமதி.சின்னம்மாள் இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்ட காரணத்தால் எனது அம்மா திருமதி.தமயந்தி லட்சுமி அவர்கள் எனது பாட்டி பெற்று வந்த குடும்ப

ஓய்வூதியத்தை தொடர்ந்து பெற்று வரலாம், அதனால் அதனைப்பெற உரிய முயற்சி எடுங்கள் என்று கூறினார்கள். நானும் அதுபற்றி விசாரித்து தொடர்புடைய ஆவணங்களை எனது அம்மாவிற்காக பெற்றேன். அப்போது 11.07.2024ல் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இறந்து போன எனது தந்தை திரு.பொன்ராஜ் அவர்கள் இறப்பிற்காக பெறப்பட்ட இறப்பு சான்றிதழில் எனது அம்மாவின் பெயர் திருமதி.தமயந்தி லட்சுமி என்பதற்கு பதிலாக தமயந்தி என்று மட்டும் குறிப்பிடப்பட்டு சான்று வழங்கப்பட்ட விபரம் தெரியவந்தது. அதனால் அந்த இறப்பு சான்றிதழில் எனது அம்மாவின் பெயரை தமயந்தி லெட்சுமி என்று மாற்றம் செய்து இறப்பு சான்றிதழ் பெறுவதற்காக திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு 22.10.2026 அன்று நான் எனது அம்மாவின் பெயரில் மனு கொடுத்தேன். அதற்கான விண்ணப்ப கட்டணமாக ரூ.20/-ஐ அரசு கணக்கில் அன்றே செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டேன். அதன் பின்னர் 27.10.2026 அன்று மாலை சுமார் 05.15 மணிக்கு 9597364409 என்ற எண்ணில் இருந்து எனது அம்மாவின் மொபைல் எண்.9688979091 என்ற எண்ணிற்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் பேசிய நபர் திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து பேசுவதாகவும், இறப்பு சான்றிதழ் பெயர் மாற்றம் தொடர்பாக ஆவணங்களை எடுத்துக்கொண்டு அலுவலகத்திற்கு வருமாறு தெரிவித்தார். நானும் எனது அம்மாவின் பெயரில் மாற்றம் செய்வதற்கு ஆதாரமாக பள்ளியில் பெறப்பட்ட மாற்று சான்றிதழ் வைத்திருப்பதாகவும், அதனை எடுத்துக்கொண்டு வந்து பார்ப்பதாகவும் தெரிவித்தேன். அதன்பின்னர் 28.10.2026 அன்று பிற்பகல் 4 மணியளவில் நானும் எனது அம்மா திருமதி.தமயந்தி லட்சுமி அவர்களும் திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் அந்த பிரிவுக்கு சென்று நேற்று (27.10.26) பெயர் மாற்றம் தொடர்பாக போனில் தகவல் தெரிவித்து வரச் சொல்லியதாக தெரிவித்தேன். அதற்கு அங்கிருந்த ஒருவர் என்னிடம் நான் தான் வரச்சொன்னேன், ஆவணங்களை கொண்டு வந்துவிட்டீர்களா என்று தெரிவித்து ஆவணங்களை பார்வையிட்டு எங்களை சிறிது நேரம் ஹாலில் அமர்ந்திருக்குமாறு கூறினார். சிறிது நேரத்தில் மற்றொருவர் வந்து எங்களிடம் சென்னையில் பேசிவிட்டதாகவும், பெயர் மாற்றம் செய்து தரவேண்டும் என்றால் ரூ.3,500/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்றும், கொடுத்தால் ஒரு வாரத்திற்குள் வேலையை முடித்து சான்றிதழ் கொடுத்துவிடுவோம் என்றார். அதற்கு நாங்கள் எங்களிடம் பணம் ஏதும் இல்லை

என்பதால் மறுநாள் வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டோம். அதற்கு பின் திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் கேட்ட லஞ்சபணம் ரூ.3500/- என்னால் தயார் செய்ய முடியவில்லை. எனவே நேற்று 29.10.26 நண்பகல் சுமார் 12 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று ஏற்கனவே என்னிடம் போனில் பேசிய நபரை சந்தித்து பணம் கொண்டு வரச்சொன்னச் சொன்ன பணத்தை தயார் செய்ய முடியாததால் நேரில் வந்து பார்த்துவிட்டு ஏதேனும் குறைத்துக்கொள்ள முடியுமா என்று கேட்பதற்காக வந்ததாக தெரிவித்தேன். அதற்கு அவர் சுகாதார அலுவலர் திரு.தங்கவேல் அவர்கள் சிறிது நேரத்தில் வந்துவிடுவார் என்றும், பணம் ரூ.3500/-ஐ அவர்தான் கேட்டதாகவும், பணத்தை குறைக்கவேண்டும் என்றால் அவரை பார்த்து பேசிக் கொள்ளுங்கள் என்றும் கூறினார். நானும் திரு.தங்கவேல் அவர்களை பார்த்து பேசுவதற்காக அங்கு காத்திருந்தேன். பின்பு பிற்பகல் சுமார் 02.15 மணிக்கு சுகாதார அலுவலர் திரு.தங்கவேல் அவரது சீட்டிற்கு வந்து அமர்ந்தார். அவரிடம் சென்று இறப்பு சான்றிதழ் பெயர் மாற்றம் தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் ஏற்கனவே ரூ.3500/- கேட்டிருந்தேனே, கொண்டு வந்துள்ளீர்களா என்றார். அதற்கு நான் பணம் தயார் செய்ய முடியவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் பணம் ரூ.3500/- கொடுத்தால் வேலை முடியும், இல்லாவிட்டால் செய்ய முடியாது என்றார். அதற்கு நான் பணம் தயார் செய்ய முடியவில்லை என்றும், கொஞ்சம் குறைத்துக்கொள்ள முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் முடிந்தால் பணத்தை கொடு, இல்லாவிட்டால் இந்த வேலையை ஏன் செய்கிறாய் என்றார். அதற்கு நான் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.1000/- குறைத்துக்கொண்டு ரூ.2500/-ஐ கொடுத்து விடுங்கள், வேலையை முடித்து தருகிறேன். மேலும் நாளையே அந்த பணத்தை அலுவலகத்தில் அவரை சந்தித்து கொடுக்குமாறும், அப்போது தான் தீபாவளிக்கு முன்பு வேலையை முடித்து தரமுடியும் என்று கூறினார். நானும் நாளை (30.10.26) பணம் ரூ2500/- எடுத்துக்கொண்டு திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் அவரை சந்திப்பதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்பு வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில் ரூ.2,500/-ம் லஞ்சமாக கேட்கும் திண்டுக்கல் மாநகராட்சி சுகாதார அலுவலர் திரு.தங்கவேல் அவர்களுக்கு பணத்தை லஞ்சமாக கொடுத்து வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, என்னிடம் ரூ.2,500/-ம் லஞ்சமாக கேட்ட திண்டுக்கல் மாநகராட்சி சுகாதார அலுவலர் திரு.தங்கவேல் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு

வேண்டுகிறேன். இத்துடன் பணம் ரூபாய் 2,500/-ம் கொண்டு வந்துள்ளேன். மேலும் இத்துடன் எனது அம்மாவின் பெயர் மாற்ற விண்ணப்பம் அத்தோடு தொடர்புடைய ஆவணங்களின் நகல்களை இணைத்துள்ளேன். மேற்படி திண்டுக்கல் மாநகராட்சி சுகாதார அலுவலர் திரு.தங்கவேல் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (P.குமார்.30.10.2026).

Sir, Received the complaint on 30.10.2026 at 07.45hrs and made a Confidential Verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC, Cr.No.17/2026, u/s.7(a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, was registered today at 08.45 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 30.10.2026).

Original FIR along with Computer typed complaint of Tr.P.Kumar, S/o. Ponraj(late), D.No.7-5-32A, Sonaikovil Theru, Kannivadi West Taluk, Dindigul District and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

30/10/26

(P.Palanisamy),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul